**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 188 / 2016** |
| **Deposition of witness for** | : | **PW : 22** |
| **Name** | : | **திரு. செந்தில்குமார்** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **26.08.2022**

**முதல் விசாரணை :**

நான் தற்போது கீரைத்துறை குற்றப்பிரிவு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவம் நடந்த அன்று C3 SS காலனி காவல்நிலையத்தில் 31.07.2015 அன்று முதல் நிலை காவலராக பணிபுரிந்தேன். அன்றைய தின அலுவலாக அன்று இரவு 20.00 மணிக்கு பாஸ்போட் கொடுத்து C3 SS காலனி காவல்நிலைய குற்ற எண். 700/2015 வழக்கில் இறந்த பெண்ணின் பிரேதத்தினை பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் கடிதத்தினை பெற்று, சம்பவ இடத்தில் இருந்த ஆய்வாளரிடம் கையொப்பம் பெற்று, மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையின் மருத்துவ அலுவலரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். பிரேத பரிசோதனைக்காக இறந்த பெண்ணின் சடலத்தை மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்தேன். மீண்டும் நிலையம் வந்து அறிக்கை செய்தேன். **அதற்கான வேண்டுகோள் கடிதம் அதசாஆ.28 ஆகும்.**

01.08.2015 ம் தேதி அன்று காலை 09.00 மணிக்கு நிலையம் வந்து கடவுச்சீட்டு பெற்று மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை சவக்கிடங்கிற்கு

ஆய்வளருடன் வந்தேன். அங்கு ஆய்வாளர் பிரேத விசாரணை செய்தார். அவர் தயார் செய்து கொடுத்த பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதத்தை பெற்று பிரேத பரிசோதனை செய்த மருத்துவரிடம் கொடுத்தேன். பின்னர் பிரேத பரிசோதனை முடித்து உடலை நல்லடக்கம் செய்ய அவரது பெற்றோர் வசம் ஒப்படைத்தேன். இறந்த பெண் அணிந்திருந்த டிரசை காவல்நிலையத்தில் ஒப்படைத்தேன். இறந்த பெண்ணின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட திரவம் மற்றும் இரத்த மாதிரிகளை மருத்துவமனையிலேயே வைத்துவிட்டு நிலையம் வந்து அறிக்கை செய்தேன்.

பின்னர் 06.08.2015 அன்று மதுரை, கூடுதல் மகளிர் நீதிமன்றம் வந்து, அறிக்கை செய்து, இரண்டு மூடிய சீல் வைத்த கவர்களைப் பெற்றேன். அவற்றை மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை சென்று கொடுத்து, பிரேதத்தில் இருந்து எடுத்து வைக்கப்பட்டிருந்த திரவம் மற்றும் இரத்த மாதிரிகளைப் பெற்று, மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் கொடுத்தேன். **அதற்கான வேண்டுகோள் கடிதம் அதசாஆ.29 ஆகும்.** அதன் பிறகு நிலையம் சென்று அறிக்கை செய்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

31ம் தேதி நான் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை செல்ல 01ம் தேதி கடிதம் வாங்க இயலாது. அதசாஆ,28ல் தேதி 01.08.2015 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பிரேதத்தினை மருத்துவமனையில் ஒப்படைத்தற்கான வேண்டுகோள் கடிதத்தினை நீதிமன்றத்தில் கொடுக்கவில்லை. அதை மருத்துவர்களிடம் கொடுத்துவிட்டேன். 31ம் தேதி நான் மருத்துவமனையில் பிரேதத்தை சவக்கிடங்கில் வைத்ததற்காக கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதம் தற்போது நீதிமன்றத்தில் இல்லை. உண்மையிலேயே ஆய்வாளர் 01.08.2015ம் தேதிதான் வேண்டுகோள் கடிதம் கொடுத்தார் என்றால் சரியல்ல. இறந்துபோன கௌரியின் பிரேதத்தினை மருத்துவமனை

சவக்கிடங்கில் யார் சேர்த்தார்கள் என்றால் என்னுடன் வெங்கடேஷ் இருந்தார். இந்த விபரத்தை ஆய்வாளர் விசாரணையின் போது சொல்லியுள்ளேன். நானும் வெங்கடேஷீம் பிணவறையில் வைத்த பிறகு வெங்கடேஷ் எங்கு சென்றார் என்றால் நான் பிரேதத்தை மருத்துவமனையில் ஒப்படைத்தவுடன் காவல்நிலையம் சென்றுவிட்டேன். வெங்கடேஷ் மருத்துவமனைக்கு தனிகாரில் வந்திருந்தார். நான் வெங்கடேஷை மருத்துவமனையில் வைத்து பார்த்தேன். அந்த காரில் தான் கௌரியின் பிரேதம் இருந்தது. காரில் வேறு யார் இருந்தார்கள் என்றால் வெங்கடேஷின் பிள்ளைகள் இருந்தார்கள். அன்றைய பணி முடிந்தவுடன் நான் காவல்நிலையத்திற்கு சென்று காவல்நிலையத்தில் பொறுப்பு அலுவலரிடம் அறிக்கை செய்தேன். அந்த சமயத்தில் யார் பொறுப்பு அலுவலராக இருந்தார் என்று தற்போது ஞாபகம் இல்லை. அன்றைய தினம் Rollcall படி எனக்கு சுற்றுக்காவல் பணி நியமிக்கப்பட்டிருந்தது. சுற்றுக்காவல் பணியில் இருந்த என்னை அரசு மருத்துவமனையில் பிரேதத்தினை சேர்க்கச் சொல்லி யார் எனக்கு சொன்னார்கள் என்றால் SS காலனி காவலர் தான் சொன்னார். யார் என்று தற்போது ஞாபகம் இல்லை. Roll call ன் படி அன்றைய தினம் SS காலனி காவல்நிலயத்திற்கு யார் பொறுப்பு அதிகாரி என்று ஞாபகம் இல்லை. ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, மருத்துவமனையில் வெங்கடேஷ் மற்றும் அவரது குழந்தைகள் இருந்ததாக சொல்லவில்லை. கௌரியின் பிரேதத்தை நான் மருத்துவமனையில் சேர்த்தபோது எத்தனை மணி இருக்கும் என்றால் நேரம் ஞாபகம் இல்லை. தோராயமாக இரவு சுமார் 12.00 மணி இருக்கும். நான் பிணத்தை நேரடியாக பிணவறைக்கு கொண்டு செல்ல இயலாது. வேண்டுகோள் கடிதம் கொடுத்துதான் சேர்க்க முடியும். Medical lego வழக்குகளில் ஒரு பிரேதத்தையோ, ஒரு நபரையோ மருத்துவமனைக்கு உள்ளே கொண்டு செல்லவேண்டும் என்றால் விபத்து பதிவேட்டில் பதிவு செய்த பிறகு தான் அனுமதிக்கப்படுவார்கள். நான் கொண்டு சென்ற வேண்டுகோள் கடிதத்தை மருத்துவ அலுவலரிடம் கொடுக்க வேண்டும். அந்த வேண்டுகோள் கடிதத்தில், என்ன காவல் நிலையம், குற்ற

எண், சட்டப்பிரிவு ஆகியவை குறிப்பிடப்படவேண்டும் என்றால் காவல்நிலைய குற்ற எண் இருந்தால் போதும். இந்த வழக்கு சந்தேக மரண வழக்கு என்று தான் மருத்துவரிடம் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தில் கொடுக்கப்பட்டிருந்தது. நான் மருத்துவரிடம் அந்த வேண்டுகோள் கடிதத்தை கொடுத்துவிட்டேன். நான் சேர்த்தபோது, பிரேதத்தின் உறவினர்கள் இருக்கிறார்களா என்று மருத்துவர் கேட்கமாட்டார். காவலர்கள் மட்டும் தான் வேண்டுகோள் கடிதம் கொடுப்போம். அந்த காவலர் பெயரினை மட்டும் தான் விபத்து பதிவேட்டில் பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். சாட்சி தம்மிச்சையாக சில சமயம் உறவினர்கள் வந்துள்ளார்களா என்று கேட்பார்கள். இந்த வழக்கில் விபத்து பதிவேட்டில் உறவினர்கள் பற்றி கேட்டார்களா என்று ஞாபகம் இல்லை. குறிப்பாக வெங்கடேஷ் மற்றும் அவரது பிள்ளைகள் அங்கு தான் இருந்தார்கள். வெங்கடேஷ் எப்போது புகார் கொடுத்தார் என்றால் பாடியோடு நின்றுகொண்டுஇருந்தார். எத்தனை மணிக்கு புகார் கொடுத்தார் என்று தெரியாது. SS காலனி காவல்நிலையம் பெரிய jurisdiction உள்ள காவல்நிலையம் ஆகும். அதனால் கையாள்வதற்கு சிரமமாக உள்ளது என்று எங்கள் காவல்நிலைய எல்கைக்கு உட்பட்ட சொக்கலிங்க நகர், மற்றும் இதர பகுதிகளில் 2012ம் வருடத்திலேயே எங்கள் காவல்நிலையத்திலிருந்து CCTV Camera பொறுத்தப்பட்டிருந்தது என்றால் ஒரு சில இடங்களில் முக்கியமான ஜங்சனில் பொறுத்தப்பட்டிருந்தது. தற்போது நான் சொன்ன விபரங்களை நான் ஆய்வாளர் விசாரணையின் போது சொல்லவில்லை. ஆய்வாளர் என்னை சரிவர விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 188 / 2016** |
| **Deposition of witness for** | : | **PW : 23** |
| **Name** | : | திரு. **A**. தாமோதரன் |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **26.08.2022**

**முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை மாநகர், மத்திய குற்றப்பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். C3 SS காலனி காவல்நிலையத்தில் நான் கடந்த 2015 ம் ஆண்டு பணிபுரிந்த போது, 06.08.2015 அன்று காலை 09.00 மணிக்கு நானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.சி.ரவிச்சந்திரன், மற்றும் முதல் நிலைக்காவலர் முத்துக்குமார் ஆகியோர்கள் C3 SS காலனி சட்டம் ஒழுங்கு காவல்நிலைய குற்ற எண்.700/2015 சட்டப்பிரிவு 454, 302 , 380, 376 இதச வழக்கில் சம்பந்தப்பட்டு மதுரை மத்திய சிறையில் இருந்த எதிரிகள் விஸ்வநாதன், முத்துக்குமார் இருவரையும் நீதிமன்ற உத்தரவுப்படி மருத்துவப் பரிசோதனைக்காக கைதிவழிக்காவல் மூலம் எடுத்து மதுரை, மருத்துவக் கல்லூரியில் ஆஜர் செய்து, மருத்துவ பரிசோதனை முடித்து மீண்டும் மேற்படி எதிரிகளை மதுரை மத்திய சிறையில் ஒப்படைத்து, நிலையம் வந்து அறிக்கை செய்தோம். **அதற்கான வேண்டுகோள் கடிதம் அதசாஆ.30 ஆகும்.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

இந்த வழக்கில் எனக்கு வழங்கப்பட்ட கடவுச்சீட்டை ஆய்வாளரிடம் கொடுத்தேன். அந்த கடச்சீட்டை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை. நான் தான் எதிரிகளை மருத்துவப்பரிசோதனைக்காக கொண்டுசென்றோம் என்பதற்காக எனது பெயர் அதசாஆ.30-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் அதசாஆ.30 ல் எனது மாதிரி கையொப்பம் இல்லை. ஆனால் நான் மாதிரி கையொப்பம் போட்டேன். அதசாஆ.30 ஆனது சிலேடைக் கொண்டுபோய் கொடுத்ததற்கான வேண்டுகோள் கடிதம் ஆகும். அதசாஆ.30 நான் கொடுக்கவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 188 / 2016** |
| **Deposition of witness for** | : | **PW : 24** |
| **Name** | : | திரு. முத்துக்குமார் |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **26.08.2022**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது தல்லாகுளம் சட்டம் ஒழுங்கு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.08.2015 ம் தேதி C3 SS காலனி காவல்நிலையத்தில் நான் பணிபுரிந்த போது, அன்று காலை 09.00 மணிக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ரவிச்சந்திரன், முதல்நிலை காவலர்.தாமோதரன் ஆகியோருடன் SS காலனி காவல்நிலையகுற்ற எண். 700/2015 பிரிவு 120(b), 454, 302, 380 & 376 உடன் இணைந்த 34 இதச வழக்கில் எதிரிகள் விஸ்வநாதன் மற்றும் முத்துக்குமார் ஆகீயோரை நீதிமன்ற உத்தரவுப்படி மருத்துவ பரிசோதனை செய்ய கடவுச் சீட்டு பெற்று மதுரை மத்திய சிறைச்சாலை சென்று மேற்படி எதிரிகளை வழிக்காவல் செய்து, மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வந்து, எதிரிகளை ஆஜர் செய்தோம். மருத்துவ பரிசோதனை முடித்து, மேற்படி எதிரிகளை மதுரை மத்திய சிறையில் ஒப்படைத்தோம். பின்னர் 10.08.2015 ம் தேதி நீதிமன்ற உத்தரவுப்படி எதிரிகள் விஸ்வநாதன் என்பவருடைய விந்து பரிசோதனை சிலேட், SO No. 72(A)/2015 மற்றும் எதிரி முத்துக்குமார் என்பவருடைய விந்து பரிசோதனை சிலேடு, SO No. 72(B)/2015 ஆகியவற்றை வட்டார

தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து MDU/biological / 313 /2015 இரசீது பெற்று நிலையம் சென்று ஆய்வாளரிடம் அறிக்கை செய்தேன். **அதற்கான வேண்டுகோள் கடிதம் அதசாஆ.31 ஆகும்.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

விந்து பரிசோதனை மருத்துவமனையில் செய்யப்படுமா அல்லது சிறைச்சாலையில் செய்யப்படுமா என்றால் மருத்துவமனையில் செய்யப்படும். நான் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்த எதிரிகளின் விந்து சிலேடுகளை நீதிமன்ற உத்தரவுப்படி கொடுத்தேன். விந்து சிலேடுகளை நான் தான் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். விந்து சிலேடுகளை மருத்துவக் கல்லூரி மருத்துவர் தான் தயார் செய்தார்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 188 / 2016** |
| **Deposition of witness for** | : | **PW : 25** |
| **Name** | : | திரு. மகாலிங்கம் |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **26.08.2022**

**முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை மாநகர், நுண்ணறிவு பிரிவில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2015 ம் ஆண்டு SS காலனி காவல்நிலையத்தில் நான் தலைமை காவலராக பணிபுரிந்த போது, 17.08.2015 ம் தேதி உத்தரவுப்படி கனம் கூடுதல் மகிளா நீதிபதி அவர்களின் உத்தரவுப்படி SS காலனி காவல்நிலைய குற்ற எண். 700/2015 சட்டப்பிரிவுகள் 454, 302, 380, 376 இதச வழக்கில் சொத்துக்களான கூடுதல் மகளிர் நீதிமன்ற RPR No. 14/2015 பிரகாரம் Item No.20 சொத்துக்களை நீதிமன்ற முத்திரையுடன் தடய அறிவியல் அலுவலகத்தில் 18.08.2015 ம் தேதி MDU/Biology/320/2015

பிரகாரம் பகுப்பாய்விற்காக ஒப்படைத்தேன். **அதற்கான வேண்டுகோள் கடிதம் அதசாஆ.32 ஆகும்.** பின்னர் நிலையம் சென்று அறிக்கை செய்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் கு.வி.**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை